## 12 ஏக்கர்.. 7 மாதங்கள்.. ரூ. 25 லட்சம்...

## 25.10.2013

### பணம் காய்க்கும் பந்தல்..!




புதுப்புது யுக்திகளைப் புகுத்தி, புத்திசாலித்தனமாக செயல்படுவர்களுக்கு... விவசாயம், பொன்முட்டையிடும் வாத்துதான்' என்பதை நிரூபித்து வருகிறார், எழுபத்து இரண்டு வயதைக் கடந்த மூத்த விவசாயி 'கேத்தனூர்' பழனிச்சாமி. கேத்தனூர், ஆறு, குளம், வாய்க்கால்.. என இயற்கை நீராதாரத்துக்கு வாய்ப்பில்லாத ஊர். ஆயிரத்து இருநூறு அடிக்கும் கீழே போய்விட்ட நிலத்தடி நீரமட்டம். வறண்டு கிடக்கும் பாசனக் கிணறுகள்... இப்படியான சூழலிலும் 'பந்தல் விவசாயத்தில் முடிசூடாத மன்னராக அரை நூற்றாண்டு காலம் அசத்தி வரும், பழனிச்சாமியின் வெற்றிச் சூத்திரத்தை அறிந்து கொள்ள.. திருப்பூர் மாவட்டம், பல்லடம் அருகேயுள்ள கேத்தனூர் கிராமத்தில் உள்ளது அவரது பண்ணை.

### வாழ்க்கையை மாற்றிய கல்பந்தல் !

எங்களுக்கு மொத்தமாக 75 ஏக்கர் நிலம் இருக்கு. பருத்தி, கொண்டைக் கடலை, கோதுமை, கம்பு என்று ஒரு காலத்தில் மானாவாரி வெள்ளாமையில் கொடிகட்டிப் பறந்த ஊருங்க இது. இப்போ, கிணற்றுப் பாசனத்தை நம்பித்தான் வண்டி ஓடுது. 50 வருடத்திற்கு முன் கொடைக்கானலுக்கு போயிட்டிருந்தேன். அப்போ, ஒரு இடத்தில் கல்பந்தல் போட்டு திராட்சை சாகுபடி செய்திட்டிருந்தாங்க. அப்போதுதான், பந்தல் விவசாயத்தைப் பற்றியே தெரிந்துகொண்டேன். உடனே, என் தோட்டத்தில் பந்தல் போட்டு, திராட்சையைப் போட்டேன். நல்ல வருமானம் கிடைத்தது. அதனால், என்னை 'திராட்சைத் தோட்டத்துக்காரர் என்றே கூப்பிட ஆரம்பித்தார்கள். 88-ம் வருடம் வரைக்கும் திராட்சை சாகுபடிதான். கூடவே, கத்திரி, தக்காளி, மிளகாய் என்று காய்கறி விவசாயமும். 89-ம் வருடத்திலிருந்து பந்தலில் காய்கறி சாகுபடி செய்துகொண்டிருந்தேன். இப்போது நான்கு ஏக்கரில் புடலை, ஒரு ஏக்கரில் கோவைக்காய் என்று மொத்தம் 12 ஏக்கரில் பந்தல் விவசாயம் செய்கிறேன்.

### நல்வழி காட்டிய நம்மாழ்வார்!

ஆரம்பத்தில், லாரி லாரியாக உரத்தைக் கொண்டு வந்து கொட்டி, ரசாயன விவசாயம்தான் செய்தேன். அதேமாதிரி, வீரியமான பூச்சிக்கொல்லிகளைத்தான் தெளித்தேன். பகல் முழுக்க என் பண்ணையில் பவர் ஸ்பிரேயர் ஓடும் சத்தம் கேட்டுக் கொண்டுதான் இருக்கும். ஒவ்வொரு முறையும் கணக்கு பார்கும்போது, உற்பத்திச் செலவுதான் அதிகமாக இருந்தது. லாபம் கம்மியாக இருந்தது. செலவை எப்படி குறைக்கலாம் என்று பலரிடம் யோசனை கேட்டுக் கொண்டிருந்த சமயத்தில்தான், நம்மாழ்வார் பற்றிக் கேள்விப்பட்டேன்.

அவரைத் தேடிப்போய் சந்தித்துப் பேசி பல தகவல்களைத் தெரிந்து கொண்டேன். இயற்கை விவசாயம்தான் லாபகரமான விவசாயத்திற்கு ஒரே தீர்வு என்று முடிவு செய்தேன். கொஞ்சம் கொஞ்சமாக மாற ஆரம்பித்துவிட்டேன்.

பஞ்சகவ்யா, மூலிகைப் பூச்சி விரட்டி, மீன் அமிலம், அரப்பு மோர் கரைசல் என்று இயற்கை இடுபொருட்களை நானே தயாரித்து, பயிர்களுக்குக் கொடுத்ததில் நல்ல பலன் கிடைத்தது. அப்படியே, சுபாஷ் பாலேக்கரோட ஜீரோ பட்ஜெட் பயிற்சி வகுப்பிலும் கலந்து கொண்டு பயிற்சி எடுத்த பிறகு, முழுக்க முழுக்க இயற்கைக்கு மாறிவிட்டேன். கலப்பின பசுமாடுகளைக் குறைத்து கொண்டு, காங்கேயம் மாடுகளை வாங்கினேன். அவைகளுடைய சாணம், கோமயத்தை வைத்து, ஜீவாமிர்தம், கன ஜீவாமிர்தம், அமுதக்கரைசல் என்று அனைத்து இடுபொருட்களையும் தயாரிக்கிறேன் என்றார்.

ஏக்கருக்கு 1,25,000 ரூபாய் நடவு செய்ய வேண்டிய நிலத்தை உழுது, கல்தூண்களை ஊன்றி கம்பிகளைக் கட்டி பந்தல் அமைக்க வேண்டும். ஒரு ஏக்கர் நிலத்தில் பந்தல் அமைக்க கிட்டத்தட்ட ஒன்றேகால் லட்ச ரூபாய் வரை செலவாகும். ஒருமுறை கல்பந்தல் அமைத்துவிட்டால்.. கம்பிகள் 50 வருடம் வரையிலும், தூண்கள் 100 வருடங்களுக்கு மேலும் பயன்தரும். பந்தல் அமைத்த பிறகு, 16 அடி இடைவெளியில் தென்வடலாக பார் அமைத்து, சொட்டு நீர்ப்பாசனக் கருவிகளைப் பொருத்திக் கொள்ள வேண்டும். ஏக்கருக்கு தலா, ஒன்றரை கிலோ அசோஸ்பைரில்லம், பாஸ்போ – பாக்டீரியா ஆகியவற்றை 12 டன் தொழுவுரத்தில் கலந்து, பார் பாத்திகளுக்குள் தூவி.. 5 அடி இடைவெளியில் இரண்டரை அடி அகலம் கொண்ட வட்டக் குழிகளை அமைக்க வேண்டும்.

### விதைநேர்த்தி அவசியம்!

புடலை 200 நாள் பயிர். தரமான நாட்டு விதைகளை (ஏக்கருக்கு 400 கிராம் தேவைப்படும்) அரைலிட்டர் பஞ்சகாவ்யாவில் இட்டு, 12 மணி நேரம் ஊற வைத்து எடுத்து நிழல் தரையில் பரப்பி, உலர வைக்க வேண்டும். இப்படி விதைநேர்த்தி செய்யும் போது முளைப்புத் திறன் அதிகரிக்கும். ஒரு குழிக்கு மூன்று விதைகள் என்ற கணக்கில் படுக்கை வசமாக நடவு செய்து.. ஒரு நாள்விட்டு ஒரு நாள் என்ற கணக்கில் பாசனம் செய்ய வேண்டும். நடவு செய்த 16-ம் நாளில் களை எடுக்க வேண்டும். தொடர்ந்து மூன்று மாதங்கள் வரை, 15 நாட்களுக்கு ஒரு களை எடுக்க வேண்டும்.

### வளாச்சிக்குப் பிண்ணாக்கு... பூச்சிக்கு புளித்த மோர்!

ஒவ்வொரு முறை களை எடுக்கும் போதும் ஒவ்வொரு செடியின் தூரிலும் அரை லிட்டர் பிண்ணாக்குக் கரைசலை ஊற்ற வேண்டும். நடவு செய்த 18-ம் நாளில் 10 லிட்டர் தண்ணீருக்கு, 250 மில்லி அரப்பு –மோர் கரைசல் என்ற விகிதத்தில் கலந்து, அனைத்து செடிகள் மேலும் படும்படி விசைத்தெளிப்பான் மூலம் புகை போல் தெளிக்க வேண்டும். 23-ம் நாள் 10 லிட்டர் தண்ணீருக்கு, 300 மில்லி பஞ்சகவ்யா என்ற கணக்கில் கலந்து செடிகள் மேல் செழிம்பாகத் தெளிக்க வேண்டும். நடவிலிருந்து 20 நாட்களுக்கு ஒரு முறை, 100 மில்லி புளித்த மோர், 50 கிராம் சூடோமோனஸ் ஆகிய இரண்டையும் 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தேவைப்படும் அளவுக்குத் தெளிக்க வேண்டும். இது இலைப்பேன் மற்றும் அசுவிணி உள்ளிட்ட பூச்சிகளைக் கட்டுப்படுத்தி, செடிகள் ஒரே சீராக வளர உதவி செய்கிறது. நடவு செய்த 60-ம் நாளுக்குப் பிறகு, 10 லிட்டர் தண்ணீருக்கு, 200 மில்லி புளித்த மோர், 100 கிராம் சூடோமோனஸ் என அளவைக் கூட்டிக் கொள்ள வேண்டும். இதைத் தெளித்து வந்தால், சாம்பல் நோய் மற்றும் வைரஸ் தொற்றுகள் இருக்காது.

26, 27 –ம் நாட்களில் ஏக்கருக்கு 200 லிட்டர் ஜீவாமிர்தம், ஆறு லிட்டர் மீன் அமிலம், 70 லிட்டர் தண்ணீர் ஆகியவற்றைக் கலந்து ஒவ்வொரு செடிக்கும் அரைலிட்டர் அளவுக்கு நேரடியாக ஊற்ற வேண்டும். இது நல்ல வளர்ச்சி ஊக்கியாக செயல்படும். 30-ம் நாளுக்குள் கொடிகளை கொம்பில் படர விட வேண்டும். கொம்புக்குப் பதிலாக கெட்டியான காடா நூலை கம்பியில் இழுத்துக்கட்டியும் படரவிடலாம். திசைமாறிப் போகும் கூடுதல் பக்கக் கிளைகளை கவாத்து செய்ய வேண்டும்.

60-ம் நாளில் 100 மில்லி அரப்பு – மோர் கரைசல், 100 மில்லி தேங்காய்ப்பால், 100 மில்லி இளநீர், இவற்றுடன் 50 கிராம் நாட்டுச் சர்க்கரை சேர்த்து, 10 லிட்டர் நீரில் கலந்து தெளித்தால், பெண்பூக்கள் உதிராமல் இருப்பதோடு, பூஞ்சண நோய்த் தாக்குதலும் இருக்காது.

பூச்சிகளுக்குப் பொறிகள்!

பந்தலுக்கு உள்பகுதியில் இரண்டு, மூன்று இடங்களில் விளக்குப் பொறிகளைக் கட்டித் தொங்க விட்டால், பச்சைப்புழுக்கள், காய் துளைப்பான்கள் போன்றவைக் கட்டுப்படும். பந்தலுக்குள் இரண்டு மூன்று இடங்களில் 'சிறிய அரிக்கேன்' விளக்கு வடிவத்தில் உள்ள இனக்கவர்ச்சிப் பொறிகளைக் கட்டித் தொங்கவிட்டால், பந்தல் காய்கறிகளைத் தாக்கும் குளவிகளைக் கட்டுப்படுத்தலாம். இந்தப் பொறிக்குள் சென்று மாட்டிக் கொண்டு அவை இறந்தவிடும்.

இதே பராமரிப்புதான் அனைத்து வகை பந்தல் காய்கறிகளுக்கும். ஆனால், பாகலுக்குக் கொஞ்சம் கூடுதல் பராமரிப்பு தேவைப்படும். புடலை சாகுபடியில் நடவு செய்த 65-ம் நாளில் இருந்து காய்களைப் பறிக்கத் தொடங்கலாம். தொடர்ந்து, 140 நாட்கள் வரை காய்ப்பு இருக்கும். சராசரியாக ஏக்கருக்கு 40 டன் அளவுக்கு விளைச்சல் இருக்கும். நாட்டுப்புடலை என்பதால், அடுத்த போகத்துக்கு உரிய விதைகளை நாமே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். மீண்டும், மீண்டும் விதைக்காக செலவு செய்வது மிச்சம்.

26 லட்ச ரூபாய் லாபம்!

ஒரு கிலோ புடலை சராசரியாக கிலோ 15 ரூபாய் என்று விலை போகிறது. ஒரு ஏக்கரில் விளையும் 40 டன் காய்கள் மூலமாக, 200 நாளில் கிட்டதட்ட 6 லட்ச ரூபாய் வருமானமாக கிடைக்கும். நான் நான்கு ஏக்கரில் புடலை போட்டிருக்கிறேன். அதன் மூலமாக 24 லட்ச ரூபாய் கிடைக்கும். சாகுபடிச் செலவு 10 லட்சம் ரூபாய் போக.. 14 லட்ச ரூபாய் லாபம்.

நான்கு ஏக்கரில் பாகல் இருக்கு. ஏக்கருக்கு சராசரியாக 25 டன் விளைச்சல் இருக்கும். இதுவும் சராசரியாக கிலோ 15 ரூபாய் என்று விலைபோகும். நான்கு ஏக்கர் பாகல் மூலமாக 15 லட்ச ரூபாய் வருமானம் கிடைக்கும். 10 லட்ச ரூபாய் சாகுபடிச் செலவு போக 4 லட்ச ரூபாய்க்கு மேல் லாபம்!

மூன்று ஏக்கரில் பீர்க்கன் இருக்கு. ஏக்கருக்கு 30 டன் கிடைக்கும். இதுவும் கிலோ 15 ரூபாய் விலை போகிறது. மூன்று ஏக்கரிலும் சேர்த்து மொத்தம் 13 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கும். இதில் 9 லட்ச ரூபாய் செலவு போக, 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் லாபம்.

ஒரு ஏக்கரில் கோவைக்காய் இருக்கு. இதில் ஏக்கருக்கு 30 டன் மகசூல் கிடைக்கிறது. இது கிலோ 20

ரூபாய்க்கு விலை போகிறது. இதன் மூலமாக 6 லட்ச ரூபாய் வருமானம் கிடைக்கும். 3 லட்ச ரூபாய் செலவு போக மூன்று லட்ச ரூபாய் லாபம்.

ஆக மொத்தம் 12 ஏக்கரிலிருந்து, 25 லட்ச ரூபாய்க்கு மேல் லாபமாக கிடைக்கிறது. வியாபாரிகள் என் தோட்டத்திற்கே வந்து காய்களை வாங்கிக்கொண்டு செல்வதால் போக்குவரத்துச் செலவு இல்லை. இவ்வளவு வருமானத்தைப் பார்க்கும் போது மலைப்பாக இருக்கலாம். ஆனால், இந்த வெற்றிக்குக் காரணம் தினமும் நான் பந்தலுக்குள் போய் பார்த்து பார்த்து தேவையான இயற்கை இடுபொருளைக் கொடுப்பதுதான். நிலம், நீர், நுணுக்கமான விவசாய அறிவு இருந்தால் போதும்.. எந்தப் பகுதியில் வேண்டும் என்றாலும் ஜெயிக்க முடியும் என்றார்.

---

**தொடர்புக்கு**

**கே.வி. பழனிச்சாமி, செல்போன் : 99439 79791.**

***ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 25.10.13 www.vikatan.com***